21-3

உ

ஸ்ரீ திருக்களர் ஆண்டவர் என வழங்கும்

ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகளின்

அறுபதாவது ஆண்டு நிறைவு

குருபூஜை வைர விழா

நினைவு மலர்




ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள்

இயற்றியவர்

மகா. கோவிந்தசுவாமியவர்கள்

கோயிலூர் மரபு.



திருக்களர்

ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள்

உ

ஸ்ரீ திருக்களர் ஆண்டவர்

என வழங்கும்

ஸ்ரீ வீர சேகர ஞான தேசிக சுவாமிகளின் அறுபதாவது ஆண்டு நிறைவு குருபூஜை

வைர விழா நினைவு மலர்.

கோயிலூர் மரபு

மகா. கோவிந்தசுவாமி அவர்களால்

இயற்றப்பட்டது.

திருக்களர்

ஸ்ரீ வீர சேகர ஞான தேசிக சுவாமிகளின்

மடாலயத் தலைவர்

ஸ்ரீ மகா. கிருஷ்ணனந்த சுவாமி அவர்களால்

வெளியிடப்பெற்றது.

1971

முதற்பதிப்பு: 1971

நேஷனல் பிரிண்டர்ஸ்,
தஞ்சாவூர்–1.

முன்னுரை

ஸ்ரீ திருக்களர் ஆண்டவர் என வழங்கும் வீர சேகர ஞான தேசிக சுவாமிகளின் பெருமை உலகம் அறிந்ததேயாகும்

அவர்கள் சென்ற விரோதிகிருது வருஷம் வைகாசி மாதம் விசாக நக்ஷத்திரத்தன்று விதேக முக்தி யடைந்தார்கள்.

ஆகவே அவர்களுக்கு வருஷா வருஷம் வைகாசி மாதம் விசாக நக்ஷத்திர நாட்களில் அதிக விமரிசை யாக்க் குருபூஜை விழாக்கள் நடைபெற்றுவருவது யாவரும் அறிந்ததேயாகும்.

நிகழும் விரோதிகிருது வருஷம் வைகாசி மாதம் இருபத்து நான்காம் தேதி சோமவாரம் விசாக நக்ஷத்திரத்தன்று அவர்களது அறுபதாவது ஆண்டு நிறைவு குருபூஜை வைரவிழா நாள் ஆகும்

ஆகவே மேற்கூறிய ஸ்ரீ ஆண்டவர் மடாலயத்தின் தலைவரும், மடாலயத்தின் நிர்வாகத்திற்கு வேண்டிய நிதிகட்காக விசேட விளை நிலங்களைப் பெருக்கியவரும் ஸ்ரீ ஆண்டவர் திரு ஆலயத்தின் திருமதில் முழுவதையும் கருங்கற்திருப்பணியாகவும், வெளிப்பிரகாரம் முழுவதும் கருங்கல் தள வரிசைத் திருப்பணியாகவும், சிர்குலைந்த விமானம் இராஜ கோபுரம் முதலியவைகளைச் சிறந்த முறையில் சீரமைப்புத் திருப்பணியாகவும் செய்து கும்பாபிஷேகம் செய்தவரும்; ஸ்ரீ ஆண்டவர் திருப்பணி செய்த ஸ்ரீ பாரிஜாதவனேசுவரர் திரு ஆலயத்தின் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு ரூபாய் (35,000) முப்பத்தி ஐயாயிரம் செலவில் உள்விமானம், மேல் விமானம்

இவைகளுக்கு செப்பேடு வேய்தலும், உள் விமானத்திற்கு வெள்ளி முலாம் பூசுதலும் ஆகிய திருப்பணிகள் செய்தவரும், விமானங்கள் இராஜகோபுரம் முதலியவைகளின் சீரமைப்புத் திருப்பணி செய்வதற்காக, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினரிடம் பெருநிதி கொடுத்து, அவ்வாறு கொடுத்த பக்தி சிரத்தைக்காக இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை தலைமை ஆணையர் திரு. K.S நரசிம்மன் I A S அவர்களால் பொன்னுடை போர்த்திப் பெருமைப் படுத்தப்பெற்றவரும் ஆன, ஸ்ரீ கிருஷ்ணனந்த சுவாமிகள் அவர்களால் மேற்படி அறுபதாவது ஆண்டு நிறைவு குருபூஜை வைரவிழாவின் நினைவு மலராக அறுபது கவியில் அந்தாதித் தொடையாக அமைக்கப்பெற்ற ஸ்ரீ ஆண்டவர் சரிதம் மேற்படி குருபூஜை வைரவிழா நாள் அன்று அன்பர்கட்கு வழங்குவதற்காக வெளியிடப்பெற்றது.

மேற்படி குருபூஜை வைரவிழா நாள் அன்று காலையில் கும்பாபிஷேக விழாவும் நடைபெறுகிறது. இவ்வாறு இருவிழாக்களும் பொருந்தியிருப்பது விசேட புண்ணியப் பேற்றை வழங்குவதாகும்.

இங்ஙனம்,
மகா. கோவிந்தசுவாமி.

உ

ஸ்ரீ திருக்களர் ஆண்டவரென வழங்கும் ஸ்ரீ வீர சேகர ஞான தேசிக சுவாமிகளின் வரலாறு.

மங்கலம்.

ஸ்ரீ கணபதி துதி.

நேரிசை வெண்பா

சீராருந் தெய்வத் திருக்களர்வீ ரேசரது
பாராரும் மாசரிதம் பாடவே — நேராரும்
தேவாங் கணபதியின் சேவடியைச் சிந்தித்து
நாவாரப் போற்றுவாம் நன்கு.

நூல்

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம் (அந்தாதி)

நகரச் சிறப்பும் தாய் தந்தையர் இருப்பும் கூறுதல்.

1. சீர்மிகுஞ் செல்வ வகையெலாந் திகழ்ந்து
சிறந்திடும் புதுவயல் என்னும்
பேர்மிகும் நகரில் மாதவம் அனைத்தும்
பெறுதன வைசிய மரபில்
நேர்மிகும் அருணு சலமெனும் நாமம்
நேர்ந்திடும் புனிதமா தவரும்
ஆர்மிகுங் குணமார் உமையம்மை யாரும்
அரியவில் லறம்புரிந் திருந்தார்.

புத்திரப்பேற்றை விரும்பி இறைவனிடம் வேண்டுதல்.

2. இருந்திடும் அவர்க்குப் புத்திர பாக்யம்
இன்மையாற் கவலையார்ந் தருகில்
பொருந்திடும் சாக்கிக் கோட்டையா
மென்னும்
புனிதமா நகரினு லயமார்

வரந்தரும் வீர சேகரே சரையும்
வாழ்வருள் உமையமை தமையும்
திருந்திடப் பணிந்து மகவினை வேண்டித்
தினந்தினம் புரிந்தனர் துதியே

வீர சேகரர் திரு அவதாரம்

3 துதியுற மகிழ்ந்த சாக்கைவீ ரேசர்
தொடருமா வருளினே ரமிசம்
விதியறம் புரிந்த வுமையமை யுதரம்
மேவிய துலகமின் புறவே
திதியுறும் அருளார் உமையமை யுதரம்
திகழ்தச மாதமா யினபின்
மதியுறும் வீர இறையருள் மைந்தர்
மாண்பவ தாரமா யினரே.

அவதார காலம்

4 ஆயுறுங் கலிநா லாயிர மதனே
டமைதொளா யிரத்துநாற் பதினே
டேயுறு மொன்ப தாவதா மாண்டில்
இயைவுறு கீலக வருடம்
நேயமாய் வருமா வணிபனி ரெண்டில்
நிகழ்சுப வெள்ளியாம் வாரம்
தோய்மா றுறவந் துறுபுனர் பூசம்
சுபசித்த யோகம் துறவே

சாதக கன்மம் செய்தல்.

5. உறவருஞ் சுபநாள் திருவருள் மைந்தர்
உலகவ தாரமா யினபின்
பெறுமனை தந்தை மகிழ்வுறச் சாக்கை
பேணுவீ ரேசரைத் துதித்து
அறவுரு வான மகவினுக் குரிய
அருமையாஞ் சாதக கருமம்
நெறியுறு முறையிற் சிறந்திடப் புரிந்து
நிதமுற அகமிக மகிழ்ந்தார்.

நாமகரணம் வைத்தல்

6 மகிழ்ந்திருந் தருமை யாயவ தரித்த
மகவினுக் குறுதிரு நாமம்
திகழ்ந்திட வமைக்கக் கருதிமா வீர
சேகரர் அருட்பிறப் பதனுல்
தகுந்திரு வீர சேகரர் எனவே
சாற்றுகா ரணப்பெயர் அமைத்தார்
உகந்துறு வீர சேகர மகவும்
உலகுய வளர்ந்தது நிதமே.

சௌள கன்மம் இயற்றுதல்

7 நிதமுற வளரும் வீரசே கரனுர்
நேர்ந்துறும் வயதுமூன் ருக
இதமுறுந் தாயும் தந்தையும் தமரும்
இசையுறும் வீரசே கரர்க்கு
விதியுறச் சௌள கருமமா தியினை
விரிவுற இயற்றிவாழ்ந் தனர்பின்
மதிமிகும் அருணு சலமிகு தந்தை
மாசிவ பதமதுற் றனரே.

வித்தியாப்பியாசம் செய்வித்தல்

8. உற்றிடும் வீர சேகரர் வயதைந்
துறவவர் தாய்மிகு புதல்வன்
கற்றிட வேண்டும் எனுங்கருத் தினராய்க்
கலைமிகு சேதுவாம் நாமம்
பெற்றிடும் ஆசான் முன்னிலைப் படுத்தப்
பிறங்கருள் வீரசே கரனுர்
முற்றறி வதனுல் கல்விகள் பலவும்
முற்றுறத் தேர்ந்தனர் உவந்தே.

திரவியார்ச்சிதம் புரியச் செய்தல்

9. உவந்தவீ ரேசர் வயதுபத் தாக
உற்றதாய் வீரசே கரரைத்
தவம்பெறு குலத்திற் குறுதன வணிகம்
சாருமா றேவவீ ரேசர்

நவம்பெறு நிதியம் திரைகடற் ருண்டி
நலமுறத் திரட்டிமீண் டினிதாய்ப்
பவம்பெறுந் தமது புதுவயல் வந்து
பாக்கியத் திருந்தனர் சுகமே.

பெரியாரைத் துணைகோடலும் கோவிலூர்
குருகுலம் அடைதலும்

10. சுகமுறு வீர சேகரர்க் காங்கே
சூழ்பெரி யாருற வுறவே
அகமகிழ்ந் தவர்பால் அறிவுநூ லுரைகள்
அனுதினங் கேட்டுணர்ந் திடவே
தகுமுடற் பதினு ருண்டுற வவர்தம்
தாய்மண முறச்சொல மறுத்துப்
புகுமுறைத் தவமார் கோயிலூ ருறையும்
புனிதமாங் குருகுலஞ் சேர்ந்தார்

கோயிலூர் குருபரம்பரை

11. சேர்ந்திடுங் கோவி லூர்க்குரு குலமாந்
திருப்பரம் பரைவரு முறைதான்
தேர்ந்திடும் முதலாஞ் சச்சிதா னந்தத்
திருப்பரன் விண்டயன் வசிட்டன்
ஆர்ந்திடுஞ் சக்தி பராசவி யாசர்
அருஞ்சுகா கௌடபா தருள்
கூர்ந்தகோ விந்த முனிவரர் சகத்தின்
குருமிகு சங்கரர் தொடர்போ

இதுவுமது

12. தொடர்முறை பதும பாதரும் அத்தா
மலகருந் தோடகர் சுரேசர்
தடமுறை வித்தி யாரண்யர் பொருள்வைத்
தலமுறும் உகந்தலிங் கேசர்
அடர்முறை மகிமைச் சமிவன மென்னும்
அருந்தவக் கோயிலூர்ப் பெருமை
மடமுறை யாண்ட முத்திரா மேச
வள்ளலாங் குருபர ரவர்பின்,

இதுவுமது

13 பின்முறை துறவாண் டவரென வழங்கப்
பெறுமரு ளுசல குருவாம்
சின்மயக் கருணு நிதியெனும் நாமச்
சிதம்பர ஞானதே சிகராம்
சொன்முறை இந்தச் சிதம்பர ஞானச்
சோதியாங் குருவினே முனமார்
தன்மையர் பொன்னம்பலக்குரு மூலம்
சார்ந்தனர் வீரசே கரரே.

வீரசேகரரைச் சிதம்பர தேசிகர் சீடராயமைத்தலும்,
வீரசேகரரின் குரு பணியும்,

14 சேகர மான வீரசே கரரைச்
சிதம்பர குருவெனுங் கருணு
சாகரர் ஆசி புரிந்துறு முறையே
தமதருஞ் சீடரா யமைத்தார்
பாகமார் வீர சேகரர் குருவின்
பணியெனும் ஆத்தமோ டங்கம்
ஊகமாந் தானம் உகந்தசத் பாவம்
ஓதுநான் கியற்றுத லானர்

வீரசேகரர்க்குக் குருவானவர் நாநாசீவவாதக்
கட்டளை பாடமோதல்

15 ஆனபின் வீர சேகரர் மனதில்
அமைந்தமா பக்குவ அறிந்த
தானமார் பதியாம் சிதம்பர குருவும்
தமதுளம் மகிழ்ந்தருள் புரிந்து
ஞானநூல் நாநா சீவவா தமுறை
நலமுறப் பாடமோ தினரே
கோனுரை கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தார்
குலவுவீ ரேசராந் தீரர்.

வீரசேகரர் தனது பந்துக்களை விலக்குதல்

16. தீராம் வீர சேகர ரிடத்தே
சேர்தமர் தாயும்வந் திருந்து

வாரமாந் தமது புதுவயல் வந்து
மனையறம் புரியவேண் டிடவே
சாரமாம ஞான வீரசே கரனர்
சம்மத மில்லையான் இறையைச்
சேரலால் உமக்கும் நலமெனப் புகன்றார்
சென்றிட அனுமதித் தனரே.

வீரசேகரர் சந்தியாசம் பெறுதல்

17. அனுமதி யளித்த வீரசே கரனர்
அணுகுமா குருவளப் படியே
மனுமிகு சிக்கற் பொருள்வையிற் சென்று
மாணபுறும் உகந்தலிங் கேசர்
துனுமடத் திருந்த சட்டையப் பேசச்
சுவாமிபாற் காவியாம் ஆடை
கனமுறப் பெற்றுக் கோயிலூர் வந்து
கருணைமா குருபதம் பணிந்தார்.

வீரசேகரர் வேதாந்த நூல்கள் பாடம் கேட்டல்

18. பணிந்திடும் குணமார் வீரசே கரர்க்குப்
பரிவுடன் சிதம்பர குருவும்
குணந்தரும் ஆசி பலப்பல புரிந்து
கோயிலூர் மரபுரை நூல்கள்
துணிந்திடும் நாநா சீவவா தமுறை
தொல்லரி கீதைசா ரமகந்
தணந்திடக் கூறும் சசிவன்ன போதம்
சார்மகா ராசரார் துறவு.

இதுவுமது

19 துறவுவை ராக்ய சதமகத் தீபம்
சொல்லுறும் இலக்கண விருத்தி
* விறலுறும் அஞ்ஞ வதைப்பர ணியுஞ்சீர்
விவேகசூ டாமணி யதுவும்
† தறுவுதல் அறவே தப்பொருள் அறைவே
தாந்தசூ டாமணி யதுவும்

முறையுறும் ஞகவல் லியநவ நீதம்
முனியஞ்ச தசியமாம் பின்ஞல்

(*விறலுறும் = வெற்றியுறும்
† தறுவுதல் அற = குறைதல் இன்றி)

இதுவுமது

20. பின்னவில் ஈசன் கீதையும் பகவான்
பேசிடும் கீதையும் பிரமன்
பன்ஞறுங் கீதை ஞானவா சிட்டம்
பகர்பதி ஞறையுங் கருணை
மன்ஞற முறையே பாடமோ தினர்பின்
மாண்புறு வீரசே கரஞர்
துன்ஞறும் பாடச் சிரவண மனனம்
தோய்ந்துறத் தெளிந்தனர் வீடே.

வீரசேகரர் யாத்திரை சென்று சிதம்பரம் அடைதல்

21. வீடுறும் வீர சேகரர் பின்னை
மிகுதிருத் தலங்களை வணங்க
நாடிநற் குருவின் அனுமதி யடைந்து
நடையுறப் பலதலஞ் சென்று
கூடியே வணங்கிச் சிதம்பரம் அடைந்து
குலவுமா நடனநா யகனைப்
பாடியே வணங்கி மௌனதே சிகரின்
பாங்குறு மடத்தறை தங்கி

வீரசேகரர் சிதம்பரத்தில் ஆற்றுந் தொழில்கள்

22. தங்கிய வீர சேகரர் ஆங்கே
சார்ந்திடுந் தெருக்களிற் சென்று
அங்கையேற் றுண்டு அரும்பசி யாற்றி
ஆழ்பர நிட்டையார்ந் திருந்து
துங்கமா நடன வீசனைத் தினமும்
துதியுறப் பணிந்துவந் தினிதே
பங்கமில் பரம விராகரா யிருந்தார்
பன்னிரண் டாண்டுறுங் காலம்.

வீரசேகரர் திருவாவடுதுறைதேசிகரைக் கண்டுவருதல்

23. காலமோர் தினத்தில் வீரசே கரனூர்
கனதிரு வாவடு துறையார்
சீலமார் தவத்துச் சுப்பிர மணிய
தேசிகர் முன்னிலே காணச்
சாலவே விரும்பிச் சென்றவர் முன்பு
தகுமுறை வணங்கிநின் றிடவே
மேலவர் வேதாந் தத்திேனார் கவியை
விளம்புக என்றுசொற் றிடவே.

இதுவுமது

24. சொற்பதங் கேட்ட வீரசே கரனூர்
தோய்ந்தவா சிட்டமார் கவியாம்
அற்பமு முனக்கொன் றினியதா மாகில்
அதனினுற் பிறப்பகப் பட்டாய்
பொற்பவென் றெடக்கம் உற்றிடுங் கவியைப்
புகலவத் தேசிகர் மகிழ்ந்து
அற்புதப் பாராட் டுரைத்துவி பூதிப்
பைதர வாங்கிவந் தமைந்தார்

பொன்னம்பல ஞானதேசிக சுவாமிகள் சிதம்பரம்
வந்து மடமியற்றியிருத்தல்

25 அமைவுறும் பரம வீரசே கரனூர்
ஆர்ந்தமா சிதம்பர குருவின்
சமுகமுன் அடைந்த பொனம்பலக்
குருதான்
சார்குரு விதேகமுத் தியின்பின்
அமலவக் குருவின் பாதுகை தனைக்கொண்
டருஞ்சிதம் பரத்தல மடைந்தே
சமகுரு நாம மடமமைத் ததனில்
தாபித்துப் புரிந்தனர் பூசை

பொன்னம்பல ஞானதேசிகர் வீரசேகரரை அழைத்துத்
தமது மடத்தில் இருத்துதல்

26. பூசைகள் புரிந்தும் தடேசரா லயம்போய்ப்
போற்றியும் நிட்டையார்ந் திருந்தும்
நேசவே தாந்த சாத்திர பாடம்
நிகழ்த்தியு முறுபொழு தருகார்
தேசுறு ஞான வீரசே கரரைந்
திவ்விய முறையினி லழைத்து
ஆசறும் இவிடம் சிரவணம் கேட்டு
அமைகவென் றுரைத்தவண் இருத்தி.

பொன்னம்பல ஞானதேசிகர் கோவிலூர்
குருகானம் காப்பவர்
வீரசேகரரே என்று சொன்னதை வீரசேகரர் கேட்டல்

27. இருத்துவீ ரேசர் ஆங்கிருந் திடுநாள்
இதமுறுங் கோயிலூர் மடத்தின்
குருத்துவ ராம சாமிதே சிகரார்
குவிமுத்தி யடைந்ததைக் கேட்ட
பரத்துவப் பொன்னம் பலக்குரு இனிமேற்
கோயிலூர்க் குருமடம் பரிப்போர்
திரத்துவ மூறுவீ ரேசரே என்ற
செய்திவீ ரேசனுர் கேட்டார்.

வீரசேகரர் கோயிலூர் மடாலயத் தலைமை ஏற்றல்
பிரமானு சந்தானத்துக்குத் தடையெனக் கருதி
வளவனூர் சென்று ஒளிதல்

28. கேட்டவீ ரேசர் ஈண்டுறின் ஈண்டு
கிளர்பெரி யாருமை மறுப்பை
நாட்டிட முடியா ததைக்கொளின்
நாட்டமில் செல்வமும் குறைய
ஈட்டுபொன் விலங்காம் அதுவுற மேலும்
இடம்பொருள் ஏவலேக் குறித்துத்
தேட்டுறு மடமார் நாயென விழுக்காம்
திகழ்பா சிந்தனம் தவிரும்.

இதுவுமது

29. தவிரவே சித்தம் விடயமேற் செலும்பின்
சதிஇர காதியைக் கவரும்
கவரவே ஞானம் மலமுறும் அதனால்
கவலையார் பிறப்பிறப் புறுமென்
றுவருறப் பயந்து வெளியுறச் சென்றன்
றுறுநிசி வளவனூர் சேர்ந்து
தவருறும் பரம சண்முகக் குருவின்
தனிமடம் சென்றொளிந் தனரே.

பொன்னம்பல ஞானதேசிகரின் அழைப்பும் வீரசேகரர்
திரும்பி சிதம்பரம் வந்து சேர்தலும்

30 ஒளிந்தமா வீர சேகரர் செயலை
உற்றறி பொனம்பலக் குரவர்
தெளிந்ததம் குருவின் தலச்சிரத் தையினாற்
சிலவடி யார்களை யனுப்பி
உள்ந்திகழ் உரைகள் கூறுவித் தழைக்க
உறுமனத் துவர் நிலை யதனை
விளம்பிமீண் டிடலா மென்றெணி வந்து
மேவுறு சிதம்பரம் அடைந்தார்

வீரசேகரர் பொன்னம்பல ஞானதேசிகரிடம்
தன் மனநிலை கூறல்

31 அடைந்தவீ ரேசர் பொனம்பலக் குருபால்
ஐயவென் மனம்பினும் உலக
நடைவிவ கார நாட்டமெள் ளளவும்
நாடிடா தொறுத்தலி னாலே
உடைமடத் தலைமை விடயத்தல் ஏவும்
உரைவிடுத் தமைவுற வெனக்கு
விடைதர வேண்டும் என்றிடக் கேட்ட
வித்தகப் பொனம்பலப் பரமர்.

பொன்னம்பல ஞானதேசிகர் வீரசேகரரைக் கோயிலூர்
மடாலய குருஸ்தானத்தினை வஹிக்கும்படி
சம்மதிக்கக் கூறுதல்

32 பரமனார் வீரமுனிவரை நோக்கிப்
பண்புறும் அன்பரீர் உமது

உரைமிகு சுருதி சம்மதம் எமக்கும்
ஒத்ததா யினுங்குருத் தலத்தின்
திரமிகு சிரத்தை யாற்புகல கின்றேன்
சேர்ந்தநாம் ஞானவீ டுற்ற
குருவிட நன்றி கருதுக எனவே
கூறிநல் லுரைகளால் உணர்த்த.

[வீரசேகர ஞானதேசிகர் கோயிலூர் குருஸ்தானம்
வஹிக்கச் சிறிது சம்மதித்தல்]

33 உணர்த்திடு வீர சேகரர் உணர்ந்து
உயர்மனம் இளகிடச் சிறிது
இணங்கிடப் பொன்னம் பலக்குரு முதலோர்
இதயமுங் கவலையற் றமைந்து
கணஞ்செயும் இந்த முயற்சிகை கூடக்
கடவுளை வேண்டுதல் புரிந்தார்
உணங்குறு வீர சேகரர் மனதில்
உவர்வுறு நினைவுறும் முறையோ

வீரசேகர ஞானதேசிகர் சிறிது மனக்கலக்கம்உறு நல்

34. முறையெது வெனிலோ நிட்டையைத் தவிரின்
முனுமனம் விடயமே சார்ந்து
கறையுறும் என்னும் பதஞ்சலி யுரையும்
காணுரு வுறுமனம் கருவின்
உறையுறுங் குகையார் தாமிர நீர்போல்
உறுபொருள் உருவமாம் என்னும்
நிறைதவர் உரையும் நினைந்துவீ ரேசர்
நேர்மிகு மனங்கலங் கிடவே

இதுவுமது

35. கலங்குவீ ரேசர் புறவிவ காரம்
கரையிரா காதிகள் உறவே
துலங்கிட மாகும் மோக்கமார் தொழிலும்
யாகந்திற் செயும்பசு வதைதான்

புலங்கொள்புண் ணியமாம் எனினும்பா
வமுமாம்
போன்றுசஞ் சலந்தருந் தீக்கு
இலங்குகூ டியற்கை போல்விவ காரத்
தியற்கைவிட் சேபமென் றயர

வீரசேகர ஞானதேசிகரைப் பொன்னம்பல
ஞானதேசிகர் தேற்றுவித்தல்

36 அயர்ந்தவீ ரேசர் கருத்தினைக் குறிப்பால்
அறிந்திடும் பொனம்பலக் குரவர்
உயர்ந்தவீ ரேச முனிவரை நோக்கி
உமதுளச் சம்மதம் இலதேல்
முயங்குறு விவகா ராதிக ளனைத்தும்
முன்னிநாம் வகித்தலைப் புரிவோம்
தயங்கற மடத்தின் குருத்துவப் பாடம்
சாற்றுக வென்றுளம் தேற்ற.

வீரசேகர ஞானதேசிகரும் பொன்னம்பல ஞானதேசிகரும்
அடியார் கணங்களுடன் கோவிலூர் மடத்திற்குச்
செல்லுதல்

37. தேற்றுறு வீர சேகர குருவும்
சேர்ந்துறு பொனம்பலக் குருவு
ஆற்றுறும் அடியார் கணத்துடன் கூட
அருந்தவக் கோயிலூர் அடைந்து
போற்றுறும் ஆங்கார் முற்குருத் தலங்கள்
புகுந்துற வணங்கியாங் குற்றோர்க்
கேற்றமு னிராம சாமிதே சிகரின்
இட்டம்வீ ரேசரென் றேத்தி.

வீரசேகர ஞானதேசிகரை கோவிலூ மடாலய
குருதானத்தினை வஹிக்கச்செய் தல்

38. ஓதியே மூல குருவதிட் டானத்
துறுமபி டேகபூ சனைகள்
நீதியார் முறையே செய்துறு விழாக்கள்
நிகழ்த்திவீ ரேசராங் குருவை

நீதசு பானு வருடமார் கழியாம்
நியமமா தத்துறு சுபமாம்
போதுறுங் குருவின் பீடமீ திருத்திப்
புகலுப தேசியாய்ச் செயவே

இதுவுமது

39 செயவுறுந் திருவீ ரேசரின் துணையாய்த்
திகழ்ந்துறும் பொனம்பலக் குரவர்
நயமுறும் மடத்தின் செயலெலாம் புரிந்து
ஞானவே தாந்தமார் பாடம்
பயனுற நடத்தச் செய்துசின் னுளில்
பணிவிவ காரங்கள் அனைத்தும்
செயமுறு வீர தேசிகர் ஏற்கச்
செய்துனுஞ் சிதம்பரஞ் சென்றார்.

வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் குருஸ்தானம்
வஹித்தபின் மடத்தினை விருத்திக்குக் கொண்டுவரல்

40. சென்றநாள் வீர தேசிகர் வயது
முப்பதோ டாறதாம் அதன்பின்
நன்றவர் குருவின் சமாதிமண் டபமும்
நாடுகை லாசக்கொட் டகையும்
தன்றுறைப் பிரம சபைக்குரு பூசைக்
கட்டுநெற் களஞ்சியம் புட்பம்
துன்றுமண் டபமும் குளங்கிண றுதித்
துறைபல உறையுங்கட் டினரே.

ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் சிருங்ககிரி மடம்
ஸ்ரீ சச்சிதானந்த சிவாபி நவ நரசிம்மபாரதி சுவாமி
களைக் கோவிலூருக்கு அழைத்துவரல்

41. கட்டுநாள் சிருங்கை சகத்குரு வான
கனநர சிம்மபா ரதிகள்
இட்டயாத் திரைரா மேச்சுரம் வருங்கால்
இதசதுர் மாஸ்யமாம் விரதம்
தொட்டிட ராம நாதமா புரத்தில்
துதைந்திருந் ததைச்சிதம் பரமார்

நிட்டராம் பொன்னம் பலக்குரு அறிந்து
நிலேமிகு கோயிலூர் ஊர்ந்து.

இதுவுமது

42. ஊர்ந்துறும் பொன்னம் பலக்குரு ஆங்கு
உலகமா குருவினை அழைக்க
நேர்ந்தவீ ரேச ரிடத்தினிற் கூற
நினைவுற விசைந்தவீ ரேசர்
தேர்ந்திடும் பொன்னம் பலக்குரு வினையே
சென்றழைத் திடவிசை விக்க
ஓர்ந்திடும் அவரும் சென்றுற வணங்கி
உடனுற அழைத்துவந் தனரே.

ஜகத்குரு ஸ்ரீ நரசிம்மபாரதி சுவாமிகளை எதிர்கொண்டு வரவேற்றல்

43. வந்திடுங் குருவை வீரதே சிகனும்
மனும்பல சாதுமா சங்கம்
விந்தையாம் விருது பலபுடை சூழ
மிகவெதிர் கொண்டுற வணங்கி
எந்தையே வருக வருகவென் றழைத்து
இறைவராங் கொற்றவா ளீசர்
தொந்தவா லயத்தில் இருந்திடச் செய்து
துதியுப சாரங்கள் புரிந்தார்.

ஜகத்குரு நரசிம்மபாரதி சுவாமிகள் சிருங்ககிரியிலுள்ள ஸ்ரீ சாரதாம்பாள் கோவில் கட்டுவிக்கும்படி கூறுதல்

44. புரிந்திடச் சிருங்கை சகத்குரு ஆசி
புரிந்துமா சிருங்கையி லுள்ள
வரந்தரும் சார தாம்பிகை கோயில்
வரையின்கற் பணியதாக் குவித்தல்
திரந்தரும் உமது கடமையென் றுரைக்கத்
திகழ்பொனம் பலக்குரு வரரும்
புரந்திடும் வீர சேகர குருவும்
புகல்முறை செய்குவோம் என்றார்.

சிருங்ககிரி ஸ்ரீ சாரதாம்பாள் கோயில் கட்டத் திரவியம் ஈதல்

45. என்றவீ ரேசர் ஐம்பதா யிரமாய்
இயைந்தரூ பாய்களைச் சேர்த்து
வென்றியார் சிருங்கை மடத்தினிற் கொடுத்து
விளங்குமா சாரதை கோயில்
குன்றுறுங் கருங்கற் பணியதாக் குவிக்கக்
குலவுமா யாகசா லைகளும்
ஒன்றிடச் சிறப்பாய் குடமுழுக் காட்டல்
உற்றதே யாவரும் போற்ற.

வீரசேகர ஞானதேசிக சுவாமிகளிடம்,
மாணவர் சரன்புகுதல்

46 போற்றிடும் வீர தேசிகர் சமுகம்
புகுந்துறும் சீடராய் ஞானம்
ஏற்றிட விரும்பி வேங்கட முனிவர்
இனியவெள் ளியங்கிரி முனிவர்
சாற்றிடும் அண்ணு மலைக்குரு நியாய
சந்த்ரவே தாந்தபாஸ் கரராய்த்
தோற்றிடுந் தவசுப் பையதே சிகரும்
தூயமெய் யப்பதே சிகரும்.

இதுவுமது

47. தேசிக நாரா யணமுனி வரரும்
திரமிகு மண்டலே சுரராய்ப்
பேசிடு முபய பாஷைவே தாந்தப்
பெரும்பிர வருத்தகா சிரியர்
காசிகா னந்த ஞானவா சார்யர்
கனமகா தேவதே சிகரும்
தேசுறு வேத மொழிபெயர்ப் பாசான்
திருசிவா னந்தமா முனிவர்.

இதுவுமது

48 முனிவராம் வேறு பலரும் மாணவராய்
முழுதுணர் வீரதே சிகரை
நனியுறு முறையே யடைந்துவே தாந்த
ஞானபோ தனைகளைக் கேட்டுத்

தனியுறும் பிரம ஞானிக ளாகித்
தவமிகும் முத்தர்கள் ஆனுர்
புனிதமா வீர தேசிகர் சரணம்
புகுந்தமா ணவர்களே யாண்டார்

வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் கோவிலூர் சிவாலயத் திருப்பணி செய்தலும், சிருங்ககிரி ஜகத்குரு வருகையும்.

49. ஆண்டவீ ரேசர் கோவிலூர் உறையும்
அருள்மிகுங் கொற்றவா ளீசர்
பூண்டவா லயத்தின் பலதிருப் பணிகள்
புரிந்துமா குடமுழுக் காட்ட
வேண்டிய யாக சாலேக ளாதி
மிகுபணி செய்துமா சிருங்கை
காண்டிடுஞ் சகத்தின் குருநர சிம்ம
பாரதி வந்துகண் காண.

கும்பாபிஷேகம் செய்தல்

50. காணுறுங் கலியை யாயிரத் துடனே
கருதொன்ப தாவதாம் ஆண்டில்
பூணுறும் மகிமை கீலக வருடம்
பொருந்திடும் சித்திரை மாதம்
பேணுறும் பதினேன் ருவதாந் தேதி
பெறுங்குரு வாரசத் தமியில்
தோணுறு முத்தி ராடமார் மிதுனம
குடமுழுக் காட்டினர் திருந்த.

வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் ஜகத்குருவின் ஆசி பஞ்சகம் பெறுதல்.

51. திருந்துகும் பாபி டேகத்தைக் கண்டும்
திகழ்த்துமா பணிகளேக் கண்டும்
வருந்திரு சிருங்கை சகத்குரு வான
வரநர சிம்மபா ரதிகள்
பொருந்துற மகிழ்ந்து சரஸ்வதி யமையைப்
போற்றிவீ ரேசரைக் காவென்
றிருந்துறும் ஆசீர் வாதபஞ் சகத்தை
இயற்றி வாழ்த் தினர்வட மொழியில்.

ஸ்ரீ வீர சேகர ஞானதேசிக சுவாமிகள்
திரு ஏரகத்தலம் செல்லல்.

52. மொழிமிகும் ஆசி யுற்றுமா சீவன்
முத்தவீ ரேச ராண்டி ருக்க
வழிமிகுந் தனிக வைசிய நகரார்
வந்துவீ ரேசரை வணங்கிக்
குழுவுறத் திருவே ரகத்தல முருகன்
குடமுழுக் காடுதல் உறலே
விழியுறக் காண வருகென இசைந்து
மேவினர் ஏரகப் பதியே

திருவேரகத்தலத்தில் பூவனூர் இராசு முதலியார் திருக்களர்
சிவஸ்தலம் ஜீரணமுற்றிருப்பதை ஸ்ரீ வீரதேசிகரிடம் கூறுதல்

53. பதியுறே ரகத்திற் சோழநா டுறையும்
பாகமாம் பூவனூர் வாழும்
நிதியுறும் இராசு முதலியார் வந்து
நீதவீ ரேசரை வணங்கித்
துதியுறும் சோணாட் டுறுமிகு தலமாய்த்
தூருவா சாதிகட் கிறைவன்
கதியுறும் பிரம தாண்டவம் புரிந்து
காட்டிடும் புனிதமா தலமாய்.

இதுவுமது

54. தலமுறு ஞான சம்பந்த ரப்பர்
சொல்லுதே வாரமார் தலமாய்
நிலமுறு பாரி சாதமா வனமாய்
நேர்ந்துமா பாரிசா தேசன்
பலமுறும் அமிர்த வல்லியா மம்மை
பரிந்துறும் தலமதாம் அதுசீர்
குலைவுற லான ததைப்பணி செயவே
கூறுநான் வேண்டுவல் எனவே

வீரசேகர ஞானதேசிகர் இராசு முதலியாருக்கு அறிவித்துக்
கோயிலூர் செல்லுதலும், சில காலத்தின் பின்
இராசு முதலியார் கோவிலூருக்குச் செல்லலும்.

55. எனவுறக் கேட்ட வீரதே சிகனுர்
இறையரு ளிருக்கினு மென்றும்

முனமிருந் தெமது மனதுசோ ணுட்டில்
முனிவர்பாட் டுறுதலப் பணியைக்
கனமுறச் செய்யக் கருதலுண் டென்றும்
கழறிமா கோயிலு ரடைந்தார்.
பின்னையொரு நாளில் முதலியார் இராசு
பீடுறுங் கோவிலூர் குலவி

வீரசேகர ஞான தேசிக சுவாமிகளிடம் இராசு முதலியார் திருக்களர் ஆலயத் திருப்பணி செய்ய வேண்டுதலும், சுவாமிகள் திருக்களர்த்தலம் வருதலும்.

56 குலவுறும் ராசு வீரதே சிகரைக்
குணமுற வணங்கிமுன் குறித்த
தலமதாங் களரின் பணிசெய வேண்டத்
தவகுரு இயைந்துநன் னுளில்
பலமிகுந் தலமாம் திருக்களர் அடைந்து
பாரிசா தேச்சுர இறையை
நலமிகும் அமிர்த வல்லியைப் பணிந்து
நாடினர் திருவருள் மிகவே.

வீரசேகர ஞானதேசிகர் திருக்களர்த்தலத் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்தல்

57 மிகவுமத் தலத்தின் திருப்பணி முறையை
மேவிறை கனவினில் உரைக்கப்
புகல்முறை பலவாங் கோயிற்கற் பணிகள்
போற்றுமா பரணமோ டிரத
வகைமிகு தூரு வாசதீர்த் தாதி
மகிமைவே தாந்தம டாதி
தகுபணி யியற்றிக் குடமுழுக்காட்டித்
தவத்துவீ ரேசராஞ் சான்ருேர்.

வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் திருக்களர்த் தலத்தின் பிரம்மோற்சவம் நடத்தி இறைவன் ரதம், முத்தித் தானம் உறுதலும், வீரசேகர தேசிகர் வயதும்.

58. சான்றவீ ரேசர் திருக்களர் இறைக்குத்
தகும்பிர மோற்சவம் நிகழ்த்தித்

தோன்றிடும் பஞ்ச ரதஞ்செல வீசன்
தொகுரதந் தென்றிரு வீதி
பூன்றமா நடன ராசசன் னிதியும்
புனிதமாம் பிரமதீர்த் தமுமே
ஏன்றுறும் முத்தித் தானமார்ந் துறுநாள்
ஏரறு பாண்மும்மை வயதாம்.

வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் விதேக
முத்தி யடையுங் காலம்

59 வயதுறுங் கவியை யாயிரத் துடனே
மனும்பதின் மூன்றதாம் ஆண்டில்
இயைவுறு விரோதி கிருதுவை காசி
இருபதோ டேழதாந் தேதி
உயவுறும் வெள்ளி வாரமும் வளர்தல்
உறுதிர யோதசி திதியும்
பயிலுவி சாக உருவுமாம் உச்சிப்
பகலுறுஞ் சுபமிகு தினத்தே

ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் விதேகமுத்தியடைந்த
விதமும், விதேக முத்தியும்.


60. தினமுற வீர தேசிகர் இறைவன்
திருரத முன்னிலை யடைந்து
மனுமிரு கரமும் சிரமிசைக் குவித்து
மாமகா தேவவென் றிசைத்து
தனுவறு விதேக முத்தரா யமைந்தார்
சாரறு பதின்குரு பூசை
நினைவுற வியற்றுஞ் சரிதமந் தாதி
நேர்கவி யறுபதாந் தொகையே.

ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் சரிதம்
முற்றுப் பெற்றது.

—*—

பிழைத் திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	7	அவர் கத்கு	அவர்கட்கு
9	19	லஞர்	லாஞர்
10	3	சாரமாம	சாரமாம்
,,	9	குருவளப்	குருவுளப்
11	1	ஞகவல்	கைவல்
13	3	தடேசரா	நடேசரா
14	3	சதிஇர	சதிஇரா
15	3	யாற்புகல	யாற்புகல்
16	27	கோவிலு	கோவிலூர்



திருக்களர் ஸ்ரீ ஞானதேசிக சுவாமிகள் மடாலயம்